வேண்டும் என்று கேட்ட நேரத்தில், விவசாயிகளுக்குத் தண்ணீர் இல்லாமல் போனாலும் பரவாயில்லை, ஸ்பிக்கிற்குப் போகட்டும் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை நிச்சயமாக கண்டிக்கக் கூடியது. ஆகவே, அந்த நிலையைப் போக்குவதற்கு இந்த ஸ்பிக் உரத் தொழிற்சாலை ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டி அதன் மூலமாகத் தண்ணீர் எடுத்து பயன்படுத்திக் கொள்கிற அளவிற்கு ஆலோசனை கூறி, அதை அமலாக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, கசிவு நீர் என்பது தண்ணீர் செல்கிற வாய்க்கால்கள் லைனிங் செய்யப்படுவதால் கிடைக்கக்கூடிய அதிகப்படியான நீர் ஆகும். லைனிங் செய்யப்படாமல் விட்டு விட்டால், அந்த வீணாகிப் போகிறது. அந்த நீர்தான் நிலத்தடி நீராகப் போய்விடுகிறது. ஆகவே லைனிங் செய்வதன் மூலம் அந்தக் கசிவு நீரை உரத்தொழிற்சாலைகளுக்குக் கொடுத்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்த உரத் தொழிற்சாலைக்கு ஒரு பெரிய ஆழ் கிணறு தோண்டுவதன் மூலம் அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும் என்பதை ஏற்கெனவே தெரிவித்து இருக்கிறேன். விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படுமானால் கண்டிப்பாக உங்களுடைய யோசனை ஏற்றுக்கொள்ளப்படும்.

(6) தகவல் கோரல்.

உறுப்பினர் கொடுத்த அறிவிப்புகளை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. கரு. இராம. கரியமாணிக்கம் அம்பலம்: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நான் 9-ம் தேதி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி கடைசி நாள் கேளுங்கள். 30-ம் தேதி கேளுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அவர் கொடுத்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. இன்றைக்கு எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்களாம். ஆகவே, அவரைப் பேச அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது இன்றைக்குத் தயாராக இருந்து இருந்தால் எடுத்துக்கொண்டு இருப்பேன். அதில் பிரச்னை இல்லை. இன்று வரவில்லை. கடைசிநாள் அந்தப் பிரச்சினை என்ன என்பதை அவர் அவையில் தெரிவிக்க நிச்சயமாக அனுமதிக்கிறேன். இன்று வேண்டாம்.